**மொனறாகல பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மொனறாகல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொனறாகல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**
**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான சபையால் சேகரிக்கப்பட்ட மீளச் செலுத்தாத கடைகளின் ஆரம்ப வைப்புத் தொகை ரூபா 5,443,933 பொது வைப்பு கணக்கில் உள்ளடக்கப்பட்டு இருந்தது. | இக்கணக்கீட்டு தவறினை சீராக்குவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சரியாக கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய கடைகளின் ஆரம்ப வைப்புத் தொகை ரூபா 9,250,000 ஆக இருந்த போதும் அது கேள்வி கடை வாடகை வருமான கணக்கிற்கு ரூபா 23,109,706 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் ஏற்படாதவாறு செயற் படுமாறு உத்தியோ கத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது | சரியாக கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட துடைப்பம்களின் எஞ்சி இருப்பின் பெறுமதி ரூபா 11,480 ஆக இருந்த போதும் நிதிநிலை தொடர்பான கூற்றில் அது ரூபா 93,480 என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் ஏற்படாதவாறு செயற் படுமாறு உத்தியோ கத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது | சரியான இருப்பு பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய தொகைக்காக ரூபா 2,552,912 எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் பஸ் தரப்பிட நிர்மாணம் மற்றும் இயந்திர | இம் மீதியை உறுதிப்படுத்துவதற்காக எந்த ஒரு அட்டவணை ஒன்றோ அல்லது காலப்பகுப்பாய்வு | சரியாக நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்கள் கொள்வனவுக்காக வழங்கப்பட்டிருந்த கடன் தொகையில் மேலும் தீர்வு செய்யப்படாத தொகை ரூபாய் 65,291,000 இருந்தமையால் குறித்த கடன் ரூபா 62,738,088 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது | ஒன்றோ சமர்ப்பிக்கப் படாதிருந்ததுடன் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து அம்மீதி தொடர்பாக எழுத்து மூல உறுதிப்படுத்தல் ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. எதிர்காலத்தில் மீதியை உறுதிப்படுத்திய பின்னர் இது தொடர்பாக தேவையான எதிர்வரும் நடவடிக்கைகளை எடுப்பதாக தயவுடன் அறியத் தருகிறேன். | |
| (உ) | 2022 ஆம் ஆண்டின் வேலை பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 18,039,097 பெறுமதியான 11 நிர்மாண வேலைகளின் பெறுமதி ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | இக்கணக்கீட்டு தவறினை தற்போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட ஆதனங்களின் பெறுமதி மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஊ) | பிரதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு செயற்திட்டத்தின் கீழ் கிடைத்த மூலதன மானியம் ரூபா 27,801,385 மற்றும் மூலதனக் கொடுப்பனவு ரூபா 22,100,654 தொகை நிதி செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | இவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் ஏற்படாத வாறு செயற்படுமாறு உத்தியோ கத்தர் களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது | மீளாய்வாண்டிற்குரிய அனைத்து வருமானங்களும் செலவினங்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (எ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வாரச் சந்தையைக் குத்தகைக்கு வழங்கியமைக்காக பெற வேண்டிய நிலுவைத் தொகை 7,634,289 ஆக இருந்த போதும் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் அது ரூபா 6,727,204 என காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இவ்வாறான தவறுகளை சீராக்குவதாக அறியத் தருகிறேன். | சரியாக நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஏ) | பிரதேச சபையால் வெளித் தரப்பினருக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கொன்றும் வெளித் தரப்பினர்களால் சபைக்கு எதிராக தொடரப்பட்டுள்ள 06 வழக்குகள் தொடர்பாகவும் நிதிக் கூற்றுகளில் வெளிப் படுத்தப்பட்டிருக்கவில்லை | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் தொடர்பான நடவடிக்கை எடுப்பதற்கு உரிய விடய உத்தியோகத்தர் களுக்கு அறிவுறுத்தியுள்ளேன் | நிதிக்கூற்றுக்களில் உரிய வெளிப் படுத்தல்கள் செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டுள்ள நிலுவை நீர் கட்டணங்கள் மற்றும் நிலுவை கடை வாடகை மீதி அதற்காக வழங்கப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் அட்டவணைகளில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 98,750 ஆன வேறுபாடு காணப்பட்டது | ஆவணங்களை சமப்படுத்தும் போது ஏற்பட்ட பிழை ஆகும் அது எதிர்காலத்தில் சீராக்கம் செய்வேன். | ஆவணங்கள் மற்றும் பட்டோலைகள் சரியாக நாளதுவரை யாக்கப்பட்டு இலக்கமின்மைகளுக்கு காரணங்கள் கண்டுபிடித்து சரி செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 1,242,047,851 கூட்டுப்பெறுமதியான 04 சொத்து விடயங்கள் மற்றும் 02 பொறுப்பு விடயங்கள் தொடர்பாக தொழில்சார் மதிப்பீட்டாளரின் அறிக்கைகள் நிலையான சொத்துக்கள் பதிவேடு, அட்டவணைகள் மற்றும் , மீதி உறுதிப்படுத்தும் கடிதங்களை சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | சபைக்கு உரிய காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு தீர்வு செய்வதற்கும் ஏனைய ஆவணங்கள் மற்றும் அட்டவணைகளை நாளவதுவரையாக பேணி செல்வதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன் | நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்ட கணக்கு மீதிகளை உறுதிப்படுத்து வதற்காக சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

## 1.7 <u>இணக்கமின்மைகள்</u>

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்ளுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24(1) (அ) பிரிவு | சபையினால் பேணிச் செல்லப்படும் வீதிப் பதிவேட்டில் உள்ள 454 வீதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்க வில்லை | வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு தற்போது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளன. | வீதிப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2010 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கை | சபையினால் பராமரிக்கப்படும் வீதி விளக்குகள் பதிவேடின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் 2881 வீதிவிளக்குகள் பொருத்தப்பட்டிருந்த | மின்சார சபையுடன் உடன்படிக்கை செய்யாமைக்கு பல காரணங்கள் காணப்படுவதுடன் தேவையாயின் உடன்படிக்கையை | மின்சார சபையுடன் உடன்படிக்கை மேற்கொள்ள எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| போதும் வீதிவிளக்கு வெளிச்சமூட்டுதல் தொடர்பாக இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட இருக்கவில்லை | மேற்கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். . |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,924,624 ஆக இருந்ததுடன் அதனேடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,843,956 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 13,045,000 | 13,586,447 | 6,653,012 | 6,933,435 | 13,075,800 | 13,677,904 | 6,833,377 | 6,844,527 |
| (ii) | வாடகை | 19,427,450 | 43,694,679 | 24,958,554 | 18,736,125 | 33,602,500 | 18,532,148 | 9,950,256 | 8,581,892 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,770,100 | 1,641,262 | 1,641,262 | - | 1,430,100 | 1,622,408 | 1,622,408 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 30,255,275 | 24,061,822 | 17,250,585 | 6,811,237 | 21,151,355 | 29,460,025 | 18,100,480 | 11,359,545 |
| | | 64,497,825 | 82,984,210 | 50,503,413 | 32,480,797 | 69,259,755 | 63,292,485 | 36,506,521 | 26,785,964 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 82,984,211 ஆன மொத்த வருமானத்தில் ஆண்டின் இறுதிவரை | வருமானத்திலிருந்து பதிவழிப்பதற்கு அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலுவை | பட்டியலிடப்பட்ட வருமானத்தை சேகரிப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 32,480,798 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் அது மொத்த பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 39 சதவீதம் ஆகும் | இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அரச ஆதனங்களிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை தொடர்பாக குறித்த நிறுவனங்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதுடன் நிலுவையை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 13,586,448 ஆன வீதவரி வருமானத்தில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 7,315,384 ஆக இருந்ததுடன் அது மொத்த பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 54 சதவீதம் ஆகும் | நிலுவையில் அதிகாமனவை அரச ஆதனங்களிலிருந்து காணப்படுவதுடன் விரைவில் அறவிடுவதற்கு வெவ்வேறு நிகழ்ச்சிகள் செயற்படுத்தப்படுவதாக அறிய தருகின்றேன் | பட்டியலிடப்பட்ட வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 10,500,880 ஆன நிலுவை கேள்வி ஆதனக் குத்தகை வருமானத்தில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,784,462 ஆன நிலுவை வருமானமொான்று மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் நிலுவை கேள்வி ஆதனக் குத்தகை வருமானத்தில் அறவீட்டின் சதவீதம் 16 ஆன சிறிய அளவொன்றாக இருந்தது. | நிலுவை தொகையை அறவிடுவதற்கு உரிய நடைமுறைகளை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 145 கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 8,945,904 ஆன கடையில் வருமானத்திலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,375,675 ஆன கடை வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது. அது மொத்த பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 38 சதவீதம் ஆகும். | நிலுவை தொகையை விரைவில் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். | பட்டியலிடப்பட்ட வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 4,413,634 ஆன நிலுவை கடை வாடகையிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கடை வாடகை ரூபா 1,144,593 தொகை அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | மாகாண சபை பிரதான செயளலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா | நீதிமன்ற தண்டப்பண நிலுவையை பெற்றுக் கொள்வதற்காக உள்ளூராட்சி மன்ற ஆணையாளரால் தொடர்ந்தும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதுடன் நிலுவை | நிலுவை வருமானங்களை விரைவில் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 2,574,461 தொகையும், முத்திரைக் கட்டணங்கள் ரூபா 12,380,810 தொகை கிடைக்க வேண்டியிருந்தது. | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கின்றேன் | |

**2.3 மிகை அறவீடு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகை அறவீடுகளுக்குரிய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 129,580 தொகை அறவிட வேண்டியிருந்தது. | குறித்த தரப்பினர் தற்போது மரணித்துள்ளதுடன் அதற்காக நடவடிக்கைகளை எடுப்பதற்கு மரணித்தவர் களின் இறப்புச் சான்றிதழை உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திற்கு எதிர்வரும் நடவடிக்கைகளுக்காக அனுப்பியுள்ளதாக தயவுடன் அறிய தருகின்றேன். | விரைவில் மிகை அறவீட்டினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இறுதியாக 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் முன்னேற்றமடைந்த பிரதேசங்கள் இனங்காணப்பட்டிருந்த போதும் வீதவரி அறவிடக் கூடிய பிரதேசங்களை விரிவாக்குவதற்கு சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | வீதவரி எல்லைக்குள் மேற்கொள்ளப்படுகின்ற புதிய நிர்மாணங்கள் தற்காலிக மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படுவதுடன் 2021 ஆம் ஆண்டின் போது முன்னேற்றமடைந்த பிரதேசங்களாக இனங் காணப்பட்ட தொடம்வத்த பிரதேசம் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்படுத்துவதற்கு எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அறியத் தருகிறேன். இத்தொகை தற்காலிக மதிப்பீட்டின் அடிப்படையில் அறவிடுவதாகவும் எதிர்காலத்தில் விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் முறையான மதிப்பீடு ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாக அறிய தருகின்றேன். | முன்னேற்றமடைந்த பிரதேசங்கள் தொடர்பாக வீதவரி பிரகடனப்படுத்தப்பட்டு கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும் |
| (ஆ) பிரதேச சபைக்குரிய புதிய பஸ் தரப்பிடத்தில் அமைந்துள்ள 59 கடைகளிலிருந்து ரூபா 4,135 முதல் ரூபா 7,700 வரை கடை வாடகை அறவிடப்பட்டு வந்தது. அக்கடைகளுக்கு வாடகையை தீர்மானிக்கும் போது விலை மதிப்பீட்டுத் | இத்தொகை தற்காலிக மதிப்பீட்டு அடிப்படையில் அறவிடுவதாகவும் எதிர்காலத்தில் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் முறையான மதிப்பீடொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்ப்பதாக வும் அறிய தருகின்றேன். | கடை வாடகை அறவிடும் போது விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி அறவிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| திணைக்களத்தின் மூலம் மதிப்பீடொன்று மேற் கொள்ளப்படாதிருந்ததுடன் அறவிடப்பட்டு வந்த வாடகை தீர்மானிக்கப்பட்ட முறை தொடர்பாக தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்கு உரிய காணியாக சபை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள காணி மற்றும் 68 மயானங்கள் பிரதேச சபைக்கு கையளிக்கப்படாதிருந்ததுடன் 54 காணிகள் அளவீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | தற்போது காணிகளின் உரித்தினை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சபைக்கு சொந்தமான காணிகளில் அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சட்டரீதியான உரித்தினை கையேற்க வேண்டும். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் 10 பதவிகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம் 17 ஊழியர்களுக்கான பற்றாக்குறை யொன்று காணப்பட்டதுடன் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | பதவியணியினர் பற்றாக்குறை தொடர்பாக ஒவ்வொரு மாத இறுதியிலும் உள்ளுராட்சி மன்ற திணைக்களத்திற்கு அறிவிக்கப்படுவதாக அறிய தருகின்றேன் | பதவியணி வெற்றிடங்களை நிரப்ப வேண்டும் |
| (ஆ) | சபையில் சேவை புரிந்த 05 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 225,823 ஆன ஊழியர் கடன் அறவிடப்படாதிருந்ததுடன் இரண்டு ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 19,561 ஆன கடன் மீதிக்குரிய நிலுவை காலப்பகுதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிலுவைக் கடன் மீதிகளை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக அறிய தருகின்றேன் | ஊழியர் கடன்களை மீதிகளை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டிற்காக பிரதேச சபையால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் ஆண்டின் உள்ளவாறான வருமானங்களுக்கு இடையே 3 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் வருமானக் கட்டுப்பாட்டின் போது பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | சில சந்தர்ப்பங்களில் எடுக்கப்படுகின்ற நியாயமான தீர்மானங்கள் மற்றும் வருமான அறவீட்டு தந்திரோபாயங்கள் அடிப்படையில் மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கு ஈடாகும் வகையில் தொகையொன்றை அறவிடுவதற்கு முடியாமல் இருந்த சந்தர்ப்பங்களும் இருந்தன. பொது மக்கள் சேவைகளை வழங்கும் போது தேவைப்பாடுகள் மேற்கொள்ள வேண்டிய மற்றும் காலரீதியாக ஈடுபட வேண்டிய விடயங்களளை அடிப்படையாக கொண்ட பின்னர் செலவின தலைப்புககளில் விலகல்கள் இடம்பெறுவதாக தயவுடன் அறிய தருகின்றேன். | பாதீடு சரியாக தயாரிக்கப்பட்டு அதில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகள் நிறைவேற்றப்பட வேண்டும் |